

சென்னை மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருவல்லிக்கேணி, ஐஸ் ஹவுஸ் ,ஷேக் தாவூத் தெருவில் நடந்த பொதுக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை தயாநிதிமாறன் எம்.பி., கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஐ.லியோனி, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் வழங்கினர். அருகில் பகுதி செயலாளர் காமராஜ் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




மயிலாடுதுறை மாவட்ட திமுகழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா வரலாற்று சிறப்பு புகைப்பட கண்காட்சி கோவை சுப்பு ஏற்பாட்டில் தருமபுரம் ஆதினம் கலைக்கல்லூரி கலையரங்கில் 18 ஆம் தேதி தொடங்கி 22 ஆம் தேதி வரை. மிகவும் சிறப்பாக நடந்து வருகிறது. கண்காட்சியை தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீகயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஒரு படம் கூட விடாமல் அனைத்தையும் நின்று நின்று பார்த்து ரசித்து வியப்புற்றார்.

### பொருள்களின் தரத்தினை உயர்த்தி

# குடும்ப அட்டைதாரர்களின் நலனை உறுதி செய்திடுவீர்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, ஜூன் 20-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் 2024 - 25 ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து துறைத் தலைமை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை தாங்கிய உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை ஆகியவற்றின் புதிய திட்டங்கள், அறிவிப்புகள் மற்றும் வரைவு மானியக் கோரிக்கை குறித்து விவாதித்தார்.

கே.எம்.எஸ். 2023 - 24 ஆம் கொள்முதல் பருவத்திற்கான நெல் மணிகளை தடங்கலின்றி விவசாயிகளிடமிருந்து விரைவில் கொள்முதல் செய்து அதற்கான ஊக்கத்தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் உடனடியாக செலுத்தி அரவை ஆலைகளுக்கு அனுப்பி தரமான அரிசி நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புவதை உறுதி செய்திட வேண்டும் என்றும் கிடங்குகளில் போதுமான அளவு பச்சை / புழுங்கல் அரிசி இருப்பு வைக்கவும் அறிவுறுத்தினார்.

நவீன அரிசி அரவை ஆலைகளில் அரைக்கப்படும் அரிசியில் கருப்பு மற்றும் பழுப்பு நீக்கம் செய்து தரக்கட்டுப்பாட்டு அதிகாரியின் மூலம் தரத்தினை உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டது.

சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டு வரும் பாமாலின் மற்றும் துவரம் பருப்பு இருப்பு அளவினை கேட்டறிந்து அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஆய்வு செய்து பொது மக்களுக்கு துரிதமாக வழங்கிட அறிவுறுத்தினார்.

நியாயவிலைக் கடைகள் குறிப்பிட்ட நேரத்தில் திறக்கப்பட்டு, விநியோகிக்கப்படும் பொருட்களின் தரத்தினை உறுதி செய்து குடும்ப அட்டைதாரர்களின் நலனை உறுதி செய்திட அறிவுரைகள் வழங்கினார்.

அரிசிக் கடத்தலை தடுக்க குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் அனைத்து மாவட்ட வழங்கல் அலுவலர்களுடன் இணைந்து செயல்பட அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர்சஹாய் மீனா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் எஸ்.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ.அண்ணாதுரை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல்துறைத் தலைவர் க.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் கனவுத் திட்டமான தாயுமானவர் திட்டம் குறித்து -

# மாநகராட்சி உறுப்பினர்களுக்கான புரிந்துணர்வுப் பயிற்சி!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தாயுமானவர் திட்டம் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை மாவட்ட நிலை அலுவலர்களுக்கான புரிந்துணர்வுப் பயிற்சியினை மேயர் திருமதி ஆர். பிரியா நேற்று (19.06.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டு வழங்கினார்.

மேயர் பேசும்போது தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு அரசு வறுமையின் மீதான இறுதி தாக்குதல் என்ற நோக்கத்துடன் நிதிநிலை அறிக்கை 2024 25இல் நிதித்துறை அமைச்சர் அவர்களால் தாயுமானவர் என்ற புதிய திட்டத்தை அறிமுகம் செய்து 19.02.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான இந்த தாயுமானவர் திட்டத்தின் முழு நோக்கமே ஏழை மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களைக் கண்டறிந்து அரசின் திட்டங்களின் மூலம் தேவையான உதவிகளைச் செய்து, சமூக மற்றும் பொருளாதாரத்தை மேம்படையச் செய்வதே ஆகும்.

மிகவும் வறியநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும் கண்டறிந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறியநிலையில் உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைந்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது.

முதற்கட்டமாக நகர்ப்பகுதிகளில் ஏழை மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய வசிப்பிடங்களைக் கண்டறிந்து அவர்களின் குடும்பங்களை வரிசைப்படுத்தி, ஏழை மற்றும் விளம்பு நிலையில் உள்ள மக்களை அடையாளம் காணக்கூடிய ஒரு செயல் முறையாகும்.

இன்று வெளியிடப்பட்ட பயிற்சிக் கையேட்டில் ஏழை மக்களின் வசிப்பிடங்களை அடையாளம் காணுவதற்கான குழுவினை அமைத்தல், புள்ளி விவரக் கணக்கெடுப்பு குழுவினை அமைத்தல் மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளை ஏற்படுத்துதல், செயல்முறைகள் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், நகர சபைக் கூட்டத்தில் திட்டத்தினை அறிமுகம் செய்தல் போன்ற ஒவ்வொரு குழுக்களுக்கான பொறுப்புகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஏழை மக்களின் வசிப்பிடங்களை அடையாளம் காணும் வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர், நகர்ப்புர சுகாதார ஆய்வாளர், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பினைச் சார்ந்த அலுவலர், சமுதாய அமைப்பாளர்கள் (Community Organiser), சுய உதவிக் குழு/பகுதி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர், சமுதாய வளப்பயிற்றுநர் (CRP), மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுகாதாரத் தன்னார்வலர்கள் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

இத்திட்டமானது முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலத்தில் வார்டு111க்குட்பட்ட அழகிரி நகர், வார்டு 110க்குட்பட்ட புஷ்பா நகர் காமராஜபுரம் விரிவாக்கம், வார்டு 109க்குட்பட்ட கிழக்கு நமச்சிவாயபுரம், திருவொற்றியூர் மண்டலத்தில் வார்டு7க்குட்பட்ட பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் முன்மாதிரி கணக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னோடி பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கணக்கெடுப்பு முடிவுற்றப் பின்னர் சென்னையின் அனைத்து பகுதிகளிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்திடவும், அனைத்து நலிவுற்ற குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தினை அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு மேயர் ஆர். பிரியா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), த.விசுவநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், (வரிவிதிப்பு (ம) நிதி), தா.இளையஅருணா (நகரமைப்பு), மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி.ஆறுமுகம், எஸ். நந்தகோபால், நேதாஜி யு.கணேசன், பி.ஸ்ரீராமுலு, நொளம்பூர் வெ.ராஜன், எஸ்.வி. ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், தமிழ்நாடு வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் வே.பிச்சை, இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் திருமதி பா.மதுமதி, உதவி திட்ட அலுவலர்கள் திருமதி ஆர்.சாந்தி, சி.பெருமாள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (19.06.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் 2024–2025 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு மற்றும் அறிவிப்புகள், துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே. கோபால், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச்செயலாளர்/ ஆணையாளர் ஹர்சகாய் மீனா. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறை தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகபொதுமேலாளர் (சந்தை) ரெ. சதீஷ், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம்

# இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., முன்னிலை

## பொன். கௌதம சிகாமணி வரவேற்புரை! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

விழுப்புரம், ஜூன் 20-

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், இந்தியா கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து, இந்தியா கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம், இராதாபுரம், கலைஞர் திடலில் காலை 11 மணியளவில் உயர்கல்வித் துறை அமைச்சரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான க.பொன்முடி தலைமையில் நடைபெற்றது. கழக கொள்கை பரப்புச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெகத்ரட்சகன் முன்னிலை வகித்தார்.

மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் எம்.பி.,யுமான பொன்.கௌதம சிகாமணி வரவேற்புரையாற்றினார். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் துரை.ரவிக்குமார் எம்.பி., மாவட்ட கழக அவைத்தலைவர் மா. ஜெயச்சந்திரன், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் இரா. லட்சுமணன், விழுப்புரம் மாவட்ட கழக பொருளாளர் ரா.ஜனக ராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட கழக துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ரா.கற்பகம், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் எம்.தேன்மொழி, பேரூராட்சி மன்ற தலைவர் எம். அப்துல் சலாம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன், விக்ரவாண்டி ஒன்றிய குழு தலைவர் ஆர். சங்கீதஅரசி, ஒன்றிய குழு துணை தலைவர் ஆர்.ஜீவிதா, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், சிபிஎம் மாநிலகுழு ஆர்.ராமமூர்த்தி, சிபிஎம் மாநிலக்குழு ஏ.வி.சரவணன், காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவர் எம். டி.குலாம் மொய்தீன், காங்கிரஸ் வடக்கு மாவட்ட தலைவர் ஆர்.பி.ரமேஷ், சிபிஐ மாவட்ட செயலாளர்கள் எம்.சுப்பிரமணியன், ஆ.செரிராஜன், மதிமுக மாவட்ட செயலாளர் பாபு.கோவிந்தராஜ், விசிக மாவட்டசெயலாளர் தி.திலீகன், தவாக மாவட்ட செயலாளர் எம். ஆர்.குமரன்,

திக டி.கே.பழனிவேல், இ.யூ.மு.லீ.க மாவட்ட செயலாளர்கள் எஸ்.எம்.அமீர்அப்பாஸ், எஸ்.மன்சூர்உசேன், ம.நே.ம.க மாவட்ட செயலாளர் கா.அஸ்கர்அலி, மநீம பி.பாபு, கழக முன்னாள் இளைஞர் அணி எ.செ.எத்திராசன், விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ராஜமாணிக்கம், நா.தனராஜன், கா.சாம்ப சிவம், ரா.அன்னையன், தே. செல்வராஜ், நா.நாகப்பன், பா.மகேஸ்வரி, எஸ்.பாரதி, பி.வி.வெங்கடேசன், என். பாஸ்கரன், ஜி.சீனிவாசன், ஏ.ஜி.எஸ்.கணேசன், பி. குமார், கிருஷ்ணன், பி.முருகவேல், எஸ் ய.ஆசைமணி, பி.ரகுபதி, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பி.கருணாகரன், துரை ரெட்டியார், ஜனார்த்தனன், பழனி.குமரேசன், திருநிலைகண்டன், நடராஜன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் வெற்றிவேந்தன், ஜெயச்சந்திரன், சந்துரு, சிபிஎம் நிர்வாகிகள் ஏ.சங்கரன் வி.கிருஷ்ணராஜ் ஏ.கிருஷ்ணமூர்த்தி, எஸ். சித்ரா, சிபிஐ நிர்வாகிகள் மூர்த்தி பி..பாலசுப்ரமணியன், ஆனந்தன், மனிதநேய மக்கள் கட்சி நிர்வாகிகள் டி.சாதிக்பாஷா, கே.ஜபருல்லாதீன்,

கடலூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள்:

இந்நிகழ்வில் கடலூர் எம்.எல்.ஏ., கோ.ஐயப்பன், முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி. சரவணன், கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா,

ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, வி.சிவகுமார், தங்க.ஆனந்தன், டி. காசிராஜன், பி.சுப்பிர மணியன், ப.இராமலிங்கம், முத்து. பெருமாள், ஆர்.கலையரசன்,கே.ஆர்.ராயர், ப.திருமாவளவன், தெ.காசிராஜன், பி.சுப்ரமணியன், கே.ஆர். தனஞ்செயன், கே.ஆர்.கே. கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், ஆர்.நாராயணசாமி, எம். மனோகரன், ஏ.எஸ்.மதியழகன், வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், நளன்புத்தூர் நடராஜன், வி.ஆர்.ராஜேந்திகுமார், எம்.சோழன், இர.விஜயசுந்திரம், பி.சுந்திரபாண்டியன், இரா.கலையரசன், வி.கோவிந்த சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ் விஜய ராகவன், வெற்றிவேல், மஞ்சு, வடலூர் நகர மன்ற தலைவர் சிவக்குமார், பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன்,

நகர கழகச் செயலாளர் த.தமிழ்ச்செல்வன், துணை தலைவர் ஆர்.ராமர்,

பேரூர் கழக செயலாளர்கள் த.கந்தன், ப.மனோகரன், எஸ்.கணேசமூர்த்தி, கே.வி.பி.சங்கர், க.பழனி, ஜெ.அன்வர் சதாத், பூ.செல்வகுமார், மாவட்ட உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

ஒன்றிய கழக செயலாளர் ஜெய.ரவிதுரை நன்றியுரையாற்றினார்.

### காங்கேயம் - தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

# ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் இ.கே.பிரகாஷ் கழக நிர்வாகிகளைச் சந்திக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாதன் அறிக்கை!

சென்னை, ஜூன் 20-

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி செயலாளர் இ.கேபிரகாஷ் கழக நிர்வாகிகளை சந்திக்கிறார். இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாதன் அறிக்கை.

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கோவில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளுக்கு 21.06.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில் வெள்ளக்கோவில், புதுப்பை சாலையில் உள்ள பொன்னுச்சாமி மண்டபத்திலும், மூலனூர் கிழக்கு ஒன்றியம், மூலனூர் மேற்கு ஒன்றியம், மூலனூர் பேரூர், கன்னிவாடி பேரூர் பகுதிகளுக்கு காலை 11.00 மணியளவில் மூலனூர், புதுப்பை சாலையில் உள்ள எஸ்ஜேம் மண்டபத்திலும், தாராபுரம் ஒன்றியம் தாராபுரம் நகரம் கொளத்துப்பாளையம் பேரூர் சின்னக்கம்பாளையம் பேரூர் பகுதிகளுக்கு மதியம் 12.30 மணியளவில் தாராபுரம் பெரியார் சிலை அருகில் உள்ள சிவரஞ்சனி மஹாலிலும், குண்டடம் கிழக்கு ஒன்றியம் குண்டடம் மேற்கு ஒன்றியம் ருத்ராவதி பேரூர் பகுதிகளுக்கு மதியம் 3.30 மணி அளவில் குண்டடம் கோவை சாலையில் உள்ள சமுதாய கூட்டத்திலும், காங்கேயம் வடக்கு ஒன்றியம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், காங்கேயம் நகர பகுதிகளுக்கு மாலை 5,00 மணியளவில் காங்கேயம், திருப்பூர் சாலையில் அமைந்துள்ள வெங்கடேஸ்வரா மஹாலிலும், சென்னிமலை கிழக்கு, சென்னிமலை மேற்கு, சென்னிமலை பேரூர் பகுதிகளுக்கு மாலை 6.30 மணியளவில் சென்னிமலை, பசுவபட்டி அம்மன் காட்டேஜில் கழக நிர்வாகிகளை சந்திக்கிறார்.

அதுசமயம் இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சிமன்ற தலைவர்கள், ஊராட்சிமன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




சென்னை, மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் நேற்று (19.06.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் 2024–2025 ஆம் ஆண்டிற்கான கலை பண்பாட்டுத்துறை மற்றும் அருங்காட்சியங்கள் துறையின் மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் உத்தேச அறிவிப்புகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா.காந்தி, இ.ர.யா.ப, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சீ. சௌம்யா, கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர் திருமதி சீ. சிவசௌந்திரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.